JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **662/2022** |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | கதிர்வேல் | Village | நல்லாம்பட்டி |
| Father's Name | சென்னியப்பன் | Taluk | |
| | | Age | |

**Accused present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.07.2026.**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

புகார்தாரர் பெயரில் உள்ள 16.04.2022 ம் தேதியிட்ட ICICI பேங்க் , பூலம்பட்டி கிளை, சேலம் மாவட்டம் ரூ.2,00,000 /–ற்கான காசோலை (காசோலை எண். 000255) அசல். **பு.சா.ஆ.1**

புகார்தாரர் பெயரில் உள்ள 16.04.2022 ம் தேதியிட்ட ICICI பேங்க் , பூலம்பட்டி கிளை, சேலம் மாவட்டம் ரூ.2,00,000 /–ற்கான காசோலை (காசோலை எண். 000256) அசல். **பு.சா.ஆ.2**

27.05.2022 ம் தேதியிட்ட காசோலை எண். 000255 ரிட்டன் மெமோ

அசல், **பு.சா.ஆ. 3,**

30.05.2022 ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ **காசோலை எண்.** 000256 **அசல் , பு.சா.ஆ. 4,**

24.07.2020 ம் தேதியிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **பு.சா.ஆ.5,**

13.06.2022 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல், **பு.சா.ஆ. 6,**

ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பணமோ பதிலோ எனக்கு தரவில்லை. எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு நஷ்ட ஈடும் வழங்க வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய போது கம்பெனியின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் கம்பெனி எங்கு அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. ஒருவர் கம்பெனி எங்கு வைத்துள்ளார் என்று தெரியாமல் எவ்வாறு கடன் கொடுத்தேன் என்றால் என்னுடைய நண்பர் தாமோதிரன் கம்பெனியில் எதிரி வேலை செய்து வந்ததால் அதன் அடிப்படையில் கொடுத்தேன். தாமோதிரன் தாக்கல் செய்த காசோலை வழக்கும் இன்று விசாரணைக்கு உள்ளது தாமோதிரன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

2. எதிரிக்கும், எனக்கும் பிஸினஸ் Transaction எதுவும் இல்லை என்றால் சரிதான். புகாரில் 3 வது பத்தியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் ரீதியான பண பரிவர்த்தனை என்று சொல்லியுள்ளேன் அதற்கு என்ன அர்த்தம் என்றால் எதிரி கம்பெனியில் உள்ளவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். தாமோதிரன் கம்பெனியில் எதிரி வேலை செய்வதாக சொல்லியுள்ளேன் தற்போது எதிரி கம்பெனியில் உள்ளவர்களுக்கு சம்பளம் கொடுக்க

வேண்டும் என்று சொல்லியுள்ளேன் இதில் எது உண்மை என்றால் எதிரி தாமோதிரன் கம்பெனியில் வாடகைக்கு பிடித்து வேலை செய்து வருவதாக சொன்னார் அதை தான் சொன்னேன். எதிரி தாமோதிரன் கம்பெனியில் என்னவாக இருந்தார் என்றால் வாடகைக்கு பிடித்து வேலை செய்வதாக சொன்னார்.

3. நான் வருமான வரிசெலுத்தி வருகிறனா என்றால் இல்லை. என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர் வேலை செய்து வருகிறேன். 26.05.2022 ம் தேதி முதல் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி காசோலை payment stopped by drawer என்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் காசோலை திருப்பப்பட்டதற்கு வழக்கறிஞர் அறிவிப்பு தனியாக அனுப்பவில்லை என்றால் சரிதான். முதல் காசோலையை மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 30.05.2022 ம் தேதி இரண்டாவது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

4. இரண்டாவது வசூலாகிவிடும் என்று எதிரி சொன்னதன் பேரில் தாக்கல் செய்தேன். எதிரி என்னை எங்கு பார்த்து காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும்படி சொன்னார் என்றால் பெருந்துறை கடைவீதி ரோட்டில் பார்த்து சொன்னார். எவ்வாறு எதிரியை பார்த்தேன் என்றால் தற்செயலாக ரோட்டில் பார்த்தேன். முதலாவது காசோலை திருப்பப்பட்டவுடன் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இரண்டாவது காசோலை வசூலான பின்னிட்டு நடவடிக்கை எடுக்கலாம் என்றிருந்தேன். முதல் காசோலை payment stopped என்று திருப்பப்பட்டுள்ள நிலையில் ரோட்டில் எதிரியை பார்த்த போது இரண்டாவது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு payment stopped என்று குறிப்பிட்டுள்ள முதல் காசோலைக்கு பதிலாக வேறு ஒரு காசோலையை கேட்டேனா என்றால் இல்லை.

5. எதிரி இரண்டு காசோலைகளையும் ஒரே நாளில் கொடுத்தாரா என்றால் ஆமாம். முதல் காசோலை Stop payment வந்ததற்கு வசூல் செய்ய வேறு காசோலை எதுவும் வாங்கினேனா வேறு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இரண்டு காசோலைகளுக்கும் ஒன்றாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால் செல்போனில் பதிவு உள்ளது. எதிரியை நான் பார்த்து பேசிய போது முதல் காசோலையை பாஸ் செய்வதாக சொல்லியுள்ளதாக சொல்லியுள்ளேன் அதனை எனது

வழக்கு சங்கதிகளில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 4 லட்சம் பணத்திற்கு இரண்டு காசோலைகள் வாங்கியதற்கான காரணத்தை வழக்கு சங்கதிகளில் சொல்லவில்லை என்றால் சரிதான் 2 தேதிகளில் தனித்தனியாக காசோலை கொடுத்தார். எதிரியின் வீடு எங்குள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். உண்மையில் எதிரியை எனக்கு தெரியாததால் தான் எதிரியின் வீடு எங்குள்ளது என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

6. எனக்கும், எதிரிக்கும் வங்கி மூலமாக பரிவர்த்தனைகள் உள்ளதா என்றால் எதிரி என்னிடம் ரொக்கமாக வாங்கி எப்போதாவது ஒரு முறை என்னுடைய வங்கிக்கு பணம் அனுப்புவார். அவ்வப்போது நான் எதிரிக்கு பணம் கொடுத்த போது காசோலை எதுவும் வாங்கினோ என்றால் சிறிய தொகை 1 , 2 லட்சம் என்பதால் வாங்கவில்லை. எந்த தேதியில் காசோலைகள் கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றும், தாமோதிரனின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டடப்படியான கடன் எதுவும் எதிரி எனக்கு செலுத்த வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எதிரியின் தொழிலுக்கும், என்னுடைய தொழிலுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். வழக்கிலிருந்து எதிரி விடுதலை செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை